செ.வெ.எண்: 65/2021 நாள்: 30.08.2021

# மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம், ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அகலரைப்பாளையம் புதூரில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு அத்தியாவாசிய பொருட்களை வழங்கினார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம், ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அகலரைப்பாளையம் புதூரில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.08.2021) திறந்து வைத்து பயனாளிகளுக்கு அத்தியாவாசிய பொருட்களை வழங்கினார்.

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் தேவைகளை அறிந்து பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய் பெருந்தொற்று காலத்தில் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்ற வகையிலே, தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டு தவணையாக 2 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 4 ஆயிரம் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அதே போல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும், வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காகவும் விவசாயிகளின் எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் அதற்குத் தீர்வு காண்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனத்துறை எனும் ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு அனுபவம் வாய்ந்த மூத்த அமைச்சரை நியமித்துள்ளார்கள்.

*அதே போல் நகர்ப்புற பேருந்துகளில் மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பயணம் மேற்கொள்வதற்காக இலவச பேருந்து திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்கள் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.*

*வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் 12 முழு நேர அங்காடி, பகுதி நேர அங்காடி 1 மற்றும் கெரசின் பங்க் 1 எனமொத்தம் 14 அங்காடிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.*

*மேற்படி, அங்காடிகளில் 13316 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் 12711 அரிசி குடும்ப அட்டைகளாகும். 12497 அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு கொரேனா நிவாரணமாக தலாரூ.4000 வீதம் ரூ4,99,88,000 விநியோகம் செய்யப்பட்டுள்ளது.*

*வெள்ளக்கோவில் கடை எண்: 5 ல் முழு நேர நியாய விலை அங்காடி 1340 குடும்ப அட்டைகளுடன் காமராஜபுரத்தில் செயல்பட்டு வருகிறது.*

*இவ்வங்காடியிலிருந்து அகலரைப்பாளையம் புதூர், சேரன் நகர், பரப்பு மேடு ஆகிய பகுதியில் உள்ள 250 குடும்ப அட்டைதாரர்கள் காமராஜபுரத்தில் செயல்படும்ட வெள்ளக்கோவில் கடை எண் :5 க்கு சுமார் 4. கீமீ சென்டறு குடிமை பொருட்கள் பெற்று வந்தார்கள்.*

*பொது விநியோகத்திட்டத்தின் அவசியம் கருதி குடும்ப அடடைதாரர்கள் நீண்ட தூரம் சென்று அத்தியாவசி பொருட்களை பெறுவதை தவிர்க்கும் பொருட்டு தற்போது அகலரைப்பாளையம் புதூர் பகுதியில் புதிய பகுதி நேர நியா விலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 250 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகின்றனர். இவ்வாறு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்க இபைணப்பதிவாளர் திரு.சொ.ஸ்ரீனிவாசன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.முருகன், கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் திரு.சண்முக வேல் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.***